# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 05 திங்கட்கிழமை 17.02.2025 கதிர் 130








# அநுர அரசின் முதல் 'பட்ஜட்'

## பொருளாதார வளர்ச்சியே பிரதான இலக்கு



கொழும்பு , பெப். 17

தேசிய மக்கள் சக்தி அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை - சுதந்திர இலங்கையின் 79ஆவது வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

2025 ஆம் ஆண்டு 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைவது பிரதான இலக்காகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தான் இம்முறை வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரச நிதி முகாமைத்துவ சட்டத்துக்கு அமைய வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய துறைகளுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மொத்த வருவாய் மற்றும் மானியங்கள் - ரூ.4,990 பில்லியன்
- மொத்த செலவீனம் - ரூ.7,190 பில்லியன்.
- துண்டுவிழும்தொகை - ரூ.2,200 பில்லியன்.

# அரச துறையில் பணிபுரிவோருக்கு அடிப்படைச் சம்பளம் அதிகரிப்பு!



## ரூ. 15,750 உயர்வு என அறிவிப்பு

கொழும்பு. பெப். 17

அரச துறையில் அடிப்படைச் சம்பளத்தை ரூ.15,750 அதிகரித்து ரூ.24,250 இலிருந்து ரூ.40,000 ஆக உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், குறைந்தபட்ச வருடாந்த சம்பள அதிகரிப்பு ரூ.250 இலிருந்து ரூ.450 ஆக உயர்த்தப்படவுள்ளது. 7➤

## தனியார் துறையின் சம்பளமும் அதிகரிப்பு

கொழும்பு , பெப். 17

அநுர அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் தனியார் துறையினரின் அடிப்படைச் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 7➤

## சிரேஷ்ட கலைஞர் அருந்ததி ஆஸியில் இன்று காலமானார்



கொழும்பு , பெப். 17

இலங்கையின் சிரேஷ்ட கலைஞர் கலாசூரி கலாநிதி அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் தனது 79 ஆவது 7➤

## இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாளை ஆரம்பம்



கொழும்பு , பெப். 17

2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு - செலவுத்-திட்ட உரை) நிதி அமைச்சர் என்ற ரீதியில்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் இன்று நாடாளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இன்று மு.ப 10.30 மணிக்கு வரவு - செலவுத்திட்டத்துடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்திலிருந்து பாரம்பரியத்திற்கு அமைய படைக்கல சேவிதர் அழைத்துவர சபா மண்டபத்துக்குள் வருகை தந்தார்.

இதனைத் தொடர்ந்து பி.ப 1.15 மணிவரை ஜனாதிபதி வரவு - செலவுத் திட்ட உரையை நிகழ்த்தினார். 7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பொதுமக்களுக்கு நிவாரணப் பொதி



கொழும்பு , பெப். 17

எதிர்வரும் தமிழ் – சிங்கள புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய பொருட்களை மானிய விலையில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை சபையில் வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இந்தக் காலப்பகுதியில் நிவாரண பொதியொன்றும் வழங்கப்படும் என்றும் இதற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவைக் கருத்திற் கொண்டு, அதனை குறைப்பதற்கான மானிய நடவடிக்கையாக இவை மேற்கொள்ளப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன் மூலம் மக்கள் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, புத்தாண்டு காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தின் மூலம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிவாரணப் பொதியில், அரிசி, ரின் மீன், பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் கருவாடு உள்ளிட்ட உலர் உணவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொதியை வழங்குவதற்கான செலவுக்காக வரவு செலவுத் திட்டத்திலிருந்து 1,000 மில்லியன் ரூபாயை ஒதுக்க முன்மொழியப்பட்டுள்ளது. (ஐ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் உயர்தர ஸ்கேன் கட்டமைப்பு

கொழும்பு , பெப். 17

கொழும்பு துறைமுகம் - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உயர்தர ஸ்கேன் கட்டமைப்பை உருவாக்க 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைத்து வரும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், துறைமுக அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய தர முகாமைத்துவ கட்டமைப்புக்காக 750 மில்லியன் ரூபா ஒடுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார். (ஐ)

# சர்ச்சைக்குரிய மல்வானை ஆடம்பர மாளிகை



கொழும்பு , பெப். 17

கடந்த காலத்தில் பாரிய சர்ச்சையைத்தோற்றுவித்த மல்வானை ஆடம்பர மாளிகை, பசில் ராஜபக்சவினுடையதுதான் என்று மகிந்த ராஜபக்சவின் ஆஸ்தான சோதிடர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆஸ்தான சோதிடரான சுமணதாச அபேகுணவர்த்தன, இணையத்தள செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மல்வானையில் அமைக்கப்பட்டுள்ள ஆடம்பர மாளிகைக்கு அடிக்கல் நாட்டுவதற்கான சுபமுகூர்த்தம் தன்னால் குறித்துக்கொடுக்கப்பட்டது என்றும், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் மனைவி புஷ்பா ராஜபக்சவின் வேண்டுகோளுக்கு இணங்க அதனை செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடந்த காலங்களில் குறித்த மாளிகை தன்னுடையது இல்லையென்று பசில் ராஜபக்ச மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், தற்போது அது அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டு பாழடைந்து போயுள்ளது.

அவ்வாறான பாரிய மாளிகையொன்றை சாதாரண பொதுமகன் ஒருவரால் நிர்மாணிக்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ள சுமணதாச அபேகுணவர்த்தன, பசில் ராஜபக்ச அதன் உரிமையாளர் இல்லை என்று கூறுவதையும் கேள்விக்குட்படுத்தியுள்ளார். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிரைவேட்) லிமிடெட்
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்திய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# எதிர்ப்பினை வெளிப்படுத்துவது பிரஜைகளின் கடமை

கொழும்பு , பெப். 17

எதிர்ப்பு போராட்டங்களை நடாத்துவதுதான் ஜனநாயக பிரஜைகளின் கடமை என்பதை தற்போதைய ஆட்சியாளர்களிடம் பொலிஸார் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்என ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான எதிர்ப்பு போராட்டங்களை நடாத்தியவர்களே இன்று ஆட்சியாளர்களாகவும் வந்துள்ளார்கள் என்பதை இன்று நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலகத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாவட்ட செயலகத்தினை மறித்து ஆர்ப்பாட்டம் நடாத்தியதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தொடர்பான வழக்குகள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றுவந்தன.

இன்றைய தினம் இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி த.தர்சினியினால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது எதிராளிகளின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகியிருந்தார்.

வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பணங்களை முன்வைத்த நிலையில் இந்த வழக்கின் இறுதித்தினமாக ஜ/ன் 09ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி, கச்சேரிக்கு செல்லுகின்ற வழி பாதையினை மதித்தார்கள் என்கின்ற குற்றச்சாட்டை முன்வைத்து எங்களுடைய கட்சியின் உறுப்பினர்கள் பலருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.

அந்த நேரத்தில் ஒரு சில மாதங்களுக்கு பின்னர் இந்த வழக்கு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நானும் சக சட்டதரணிகளும் முன்னலையாகி இது எந்த அடிப்படைகளும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தோம்.

அந்த வேளையில் பொலிஸார் இது தொடர்பான புலனாய்வாளர்களின் அறிக்கைகள் தேவைப்படுகின்றது அவற்றை புலனாய்வு செய்வதற்கு தங்களுக்கு அவகாசம் தேவை என்று கோரிய நிலையில் அவர்களுக்கு அவகாசம் வழங்கபட்டது.

ஆனால் இப்பொழுது ஏறக்குறைய மூன்று வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் கூட இன்னமும் எதுவிதமான குற்றச்சாட்டும் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்படவில்லை.

சென்ற வாரத்திலும் இந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்த போதும் ஜுன் மாதம் ஒன்பதாம் திகதிக்கு மிக மீண்டும் திகதி இடப்பட்டு இருக்கின்றது. இது அரசாங்கத்துக்கு எதிராக ஒரு எதிர்ப்பு தெரிவித்த சம்பவம்.

ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பது என்பது பிரஜைகளின் கடமை என உச்ச நீதிமன்ற தீர்ப்புகளில் கூறியிருக்கின்றது. அவ்வாறு இருக்கின்ற போது எந்தவித அடிப்படையும் இல்லாமல் வெறுமனே இவர்களை அலைக்கழிப்பதற்கு என்று இந்த வழக்கு இவ்வளவு காலமும் கொண்டு செல்லப்பட்டு கொண்டிருக்கின்றது.

இந்த காரணத்தினால்தான் இன்றைக்கு குறித்த வழக்கை ஒரு நகர்த்தல் பத்திரம் மூலமாக அழைத்து இதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருக்கின்றோம்.

நீதவான் கடைசி ஒரு தவணை அவர்களுக்கு கொடுப்போம் ஏனென்றால் ஏற்கனவே ஜுன் 9 திகதி இடப்பட்டு இருக்கின்றதன் காரணத்தினால் அது இறுதி தினமாக கொடுப்போம் அன்று அவர்கள் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க விட்டால் வழக்கை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று கடைசி தினமாக ஜுன் 9 கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், இன்றைக்கு ஆட்சியில் இருக்கின்றவர்களிடத்திலாவது கேட்டு அறிந்து கொள்ளுமாறும் இவ்வாறு எதிர்ப்பு போராட்டங்கள் நடத்துவது தான் ஜனநாயக பிரஜைகள் உடைய கடமை அதனை செய்வது அதாவது யாராவது அவ்வாறு செய்தால் அதற்கு உதவ வேண்டும் என்பதுதான் பல நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்க இருக்கின்றது.

பொலிஸார் அவர்களுக்கு இடையூறு செய்யாமல் இருப்பது மாத்திரமல்ல அவர்கள் அவ்வாறான போராட்டங்கள் நடத்துவதற்கு உடந்தையாகவும் உதவியாகவும் இருக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது.


ஆகையினால் வெறுமனே வேற்று கட்சி என்பதன் காரணத்தினாலே பழி தீர்க்கும் நோக்கோடு இவர்களை இழுத்தடிப்பதற்காக இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணத்தை எடுத்துக் கூறி இருக்கின்றேன்.

இறுதித்தனமாக ஜுன் 9 தவணை இடப்பட்டு இருக்கின்றது. காணி அபகரிப்பு சம்பந்தமாக புதிதாக ஆட்சியில் வந்தவர்களுக்கு முதல் தடவை எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்தபோது விபரமாக அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கூறி இருக்கின்றார்கள்.

அதற்கு தாங்கள் இந்த விடயத்தை கையாளுவதாகும் சற்று காலம் தர வேண்டும் என்றும் கேட்டு இருக்கின்றார்கள். அந்த கால அவகாசம் இப்பொழுது முடிவடைந்து இருக்கின்றது என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

ஆகையினால் அரசாங்கம் இது சம்பந்தமான விடயங்களில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் பின்னணியில் நாங்கள் தொடர்ச்சியாக விரைவில் மக்கள் போராட்டங்களை நடத்த திட்டமிட்டு இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பிரிட்டன் தூதுவருடன் நாளை சுமந்திரன் பேச்சுவார்த்தை



இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

குறித்த சந்திப்பானது நாளை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளன.

அத்தோடு, நாட்டின் சமகால அரசியல் நிலவரம், அரசின் நடவடிக்கைகள், தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த செப்டெம்பர் மாதம் மேலும் ஒருவருடகாலத்துக்கு நீடிக்கபட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் எதிர வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வரவிருக்கின்றது.

இந்தநிலையில், அந்தத் தீர்மானத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு அளிக்கப்பட்ட ஆணையின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டுவரும் கடந்த கால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையின் தற்போதைய நிலவரம் மற்றும் அதனை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் முழுமையாக நிறைவு செய்வதற்கான சாத்தியப்பாடு என்பன பற்றி உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக்கிடம் சுமந்திரன் கேட்டறியவுள்ளார்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# அரச சேவையில் ஆட்சேர்ப்பு

கொழும்பு , பெப். 17

அரச சேவையில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் ஆகியவை அரசியல் செல்வாக்கு அற்ற தகுதிகள் மற்றும் திறன்களின் அடிப்படை யில் அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

பொதுச் சேவையில் அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்ப 10,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு முதல் அத்தியாவசிய பொது சேவைப் பணிகளில் 30,000 நபர்களை பணியமர்த்துவதற்கான மூலோபாய ஆட்சேர்ப்பு திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துளளார். (ஐ)

# வீதிகளில் வேலை செய்வோருக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை



கொழும்பு , பெப். 17

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக வீதிகளில் வேலை செய்பவர்கள் மற்றும் வெளிவேலைகளில் ஈடுபடுபவர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு இலங்கை பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடும் வெப்பமான வானிலை நிலவுகிறது.

இது வெளிவேலைகளில் ஈடுபடும் நபர்களை கடுமையாக பாதிக்கின்றது.

எனவே, வீதிகளில் வேலை செய்பவர்கள் மற்றும் வெளிவேலைகளில் ஈடுபடுபவர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில், வெப்பமான வானிலை காரணமாக பல பகுதிகளில் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

எனவே, வெப்பமான வானிலை குறித்து பொதுமக்கள் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

கடும் வெப்பத்தில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான அறிவிப்பு



*கொழும்பு , பெப். 17*

*விவசாயிகள் நெல் கொள்முதல் செய்ய 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.*

*அத்துடன், விவசாயிகளுக்கு உர மானியம்தொடர்ந்துவழங்கப்படுவதற்கு ரூ.35,000 மில்லியன் ஒதுக்கப்படும்எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.*

*2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை இன்று நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.*

*இதேவேளை,விவசாய அமைச்சகத்திற்கு வழங்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.*

*(ஐ)*

# புட்டேனஹள்ளி ஏரியை மீட்ட தமிழ் பெண்



அழிந்து கொண்டிருந்த கர்நாடக மாநிலம் புட்டேனஹள்ளி புட்டகெரே ஏரியை, பறவைகள் வந்து தங்கி செல்லும் ஏரியாக மாற்றி உள்ளார், தமிழரான உஷா ராஜகோபாலன்.

தமிழகம், மானாமதுரையில் பிறந்தவர் உஷா ராஜகோபாலன், 70. வளர்ந்தது கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில். எம்.ஏ., ஆங்கில இலக்கியம் முடித்துள்ள இவர், பல நிறுவனங்களில் உயர் பதவிகள் வகித்துள்ளார். அதுமட்டுமன்றி, இயற்கை ஆர்வலராகவும், எழுத்தாளராகவும் பல புத்தகங்கள், சிறுகதைகள் எழுதி உள்ளார். மொழி பெயர்ப்பாளராகவும் உள்ளார்.

பெங்களூரு புட்டேனஹள்ளியில் 2006ல் குடியேறிய இவர், தன் கண் முன் அழிந்து வரும் ஏரியை பார்த்து வேதனை அடைந்தார். தான் மட்டுமின்றி, தான் வசிக்கும் குடியிருப்புவாசிகள், சுற்றுப்புற மக்கள், பெங்களூரு மாநகராட்சியுடன் இணைந்து ஏரியை மீட்டெடுத்தார்.

இது குறித்து, உஷா ராஜகோபாலன் கூறியதாவது:

என் குடும்பத்தினர், பெங்களூரில் குடியேறியபோது, நாங்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு அருகில் புட்டேனஹள்ளி புட்டகெரே ஏரி இருந்தது. ஏரி என்று சொல்வதற்கு பதிலாக, குட்டை என்று சொல்லலாம். அந்தளவிற்கு சாக்கடை நீர், ஏரியில் கலந்திருந்தது. ஏரியை சுற்றிலும் கட்டட கழிவுகள் கொட்டப்பட்டிருந்தன. சிலர் சட்ட விரோதமாக ஆக்கிரமித்திருந்தனர்.

எனது தந்தை வனத்துறை அதிகாரி என்பதால், சிறு வயதிலேயே இயற்கையின் மகிமை குறித்து, எனக்கு சொல்லிக் கொடுத்துள்ளார். ஆனால் இங்கு நான் கண்ட காட்சி, எனக்கு மனவேதனை அளித்தது. இதை சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளிடம் முறையிட்டேன் எந்த பலனும் இல்லை.

எனவே, நான் குடியிருக்கும் பகுதி மக்களிடம் சென்று விளக்கினேன். எங்களுடன் மாநகராட்சியையும் இணைத்து கொண்டோம். இங்குள்ள மக்கள் பெருவாரியான ஆதரவு அளித்தனர். 2010 ஏப்ரலில் 'எர்த் டே' - எனும் உலக தினம் கொண்டாடினோம். அப்போது தான், பிரசன்னா நாதியா, ஆரத்தி மானே ஆகிய இருவரை சந்தித்தேன்.

ஏரியின் வளர்ச்சியை கண்காணிக்கவும், அவ்வப்போது மாநகராட்சிக்கு தகவல் அனுப்பவும் என்னுடன் இணைந்தனர். ஏரி அழிவதை நாங்கள் விரும்ப வில்லை.

எனவே, மாநகராட்சிக்கு உதவும் வகையில் 2010 ஜூனில் ராமசாமி என்பவருடன் இணைந்து, லாப நோக்கமற்ற வகையில், புட்டேனஹள்ளி சுற்றுப்புற ஏரி மேம்பாட்டு அறக்கட்டளையை பதிவு செய்தோம்.

மாநகராட்சியுடன் இணைந்து, ஏரியில் மரக்கன்று நடும் இயக்கத்தை நடத்தினோம். அப்போது இப்பகுதி மக்கள், மரக்கன்றுகள் நட்டு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கினர். மரக்கன்றுகளை பராமரிக்கவும், கண்காணிக்கவும் இருவரை பணியில் அமர்த்தினோம்.

ஏரியை பாதுகாக்கும் வகையில், 2011 மே மாதம் பெங்களூரு மாநகராட்சி, எங்களை ஏரியின் அதிகாரபூர்வ பாதுகாவலர்களாக்கியது. இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி கொண்டோம்.

இந்த ஏரியில் ஆழமான, ஆழமற்ற பகுதிகள் உள்ளன. மழை காலங்களில் தேங்கும் நீர், வெயில் காலங்களில் ஆழமற்ற பகுதிகளில் வறண்டு காட்சி அளிக்கும்.

இதை தவிர்க்க, அருகில் உள்ள அவென்யூவில் இருந்து நீர்பரப்பை, ஏரிக்கு திசை திருப்ப மாநகராட்சியிடம் முறையிட்டோம். அவர்களும் ஒப்புக் கொண்டு செய்து கொடுத்தனர். அப்போது ஆண்டின் பல நாட்கள் ஏரி வறண்டே காட்சி அளித்தது. இதனால் வறண்ட பகுதியை விளையாட்டு மைதானமாக மாற்றிக் கொண்டனர்.

ஏரியை பாதுகாக்க, எங்கள் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு மையத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை பயன்படுத்தினோம். ஆழமான இடத்தில் நிறுவப்பட்ட ஏரேட்டர் செயற்கை நீரூற்றை இயக்க எங்களுக்கு உதவியாக இருந்தது. நீரில் ஆழம் அதிகரித்ததால், ஸ்பாட் பில்டு, பெலிகன்கள், இந்திய டார்ட்டர்கள் என பல பறவை இனங்கள் ஏரிக்கு வர துவங்கின.

தற்போது பறவைகளை படம் பிடிக்க, பல புகைப்பட கலைஞர்கள் இங்கு வருகின்றனர். அத்துடன், அவர்களிடம் பயிற்சி பெறும் மாணவர்களும் போட்டோ எடுக்கின்றனர்.

ஏரியை பாதுகாக்க அமைக்கப்பட்ட குழுவினர் திறமையானவர்கள். நான் இல்லை என்றாலும், ஏரியை பாதுகாக்கும் பணியில் தளராமல் தொடருவர். அதுபோன்று அவர்களும், தங்கள் பொறுப்பை அடுத்த தலைமுறையினருக்கு ஒப்படைப்பர். (ஐ)

# ஹமாஸ் தலைவர் படங்களுடன் பனர்



கேரளா பள்ளிவாசலில் ஹமாஸ் தலைவர்களின் படங்கள் பேனர்களில் வரையப்பட்டு இருந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

இதுபற்றிய விவரம் வருமாறு: கேரள மாநிலம் பாலக்காடு அருகில் உள்ளது திரிதலா. இங்குள்ள பள்ளி வாசலில் உரூஸ் விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நிகழ்ச்சியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்க வந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில், நிகழ்ச்சிக்காக வைக்கப்பட்டு இருந்த பேனர்கள் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அந்த பேனரில் ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர்களான சின்வார் மற்றும் ஹனியே ஆகிய இருவரின் போட்டோக்கள் இடம்பெற்று இருக்கின்றன. இந்த பேனர்களை கைகளில் ஏந்திய சிலர், யானையின் மீதேறி அமர்ந்து ஊர்வலமாக வந்தனர்.

இந்த போட்டோக்களை இணையத்தில் சிலர் பதிவேற்ற சர்ச்சை வெடித்து இருக்கிறது. தீவிரவாத தலைவர்களின் படங்கள் எப்படி இடம்பெறலாம் என்று பலரும் கேள்வி எழுப்பி உள்ளனர். சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி இருக்கின்றனர். (ஐ)

# தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் புதிய கல்விக்கொள்கை



புதிய கல்விக்கொள்கை தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அனைத்து மொழிகளையும் மதிக்கிறேன்' என மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

காசியில் தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்ற தர்மேந்திர பிரதான் நிருபர்கள் சந்திப்பில், 'புதிய கல்விக்கொள்கையை அனைத்து மாநிலங்களும் ஏற்க வேண்டும் என்பது விதி. அனைத்து மாநிலங்களும் அதை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஏன் தமிழக அரசு மட்டும் ஏற்க மறுக்கிறது' என கேள்வி எழுப்பினார்.

இதற்கு, 'மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழகத்திற்கு நிதி கிடையாது என்று மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறுவதை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எங்கள் உரிமையைத்தான் கேட்கிறோம்' என முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரி வித்தார். மத்திய அமைச்சர் கூறியதை கண்டித்து தி.மு.க., போராட்டமும் அறிவித்துள்ளது.

எங்கள் உரிமையைத்தான் கேட்கிறோம் மத்திய அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலின் பதில்!

இது குறித்து இன்று (பிப்.,17) தர்மேந்திர பிரதான் அளித்த பேட்டி: புதிய கல்விக் கொள்கை தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அனைத்து மொழி களையும் மதிக்கிறேன். தமி ழகத்தின் மீது ஹிந்தி மொழியை திணிக்க வில்லை. மும்மொழி கொள்கையில் ஹிந்தி கட்டாயம் அல்ல. பிற இந்திய மொழிகளாக இருக்கலாம்.

தமிழ், ஆங்கிலம் தவிர 3வது ஆக இந்திய மொழி ஒன்றை கற்கக் கூறுகிறோமே தவிர, ஹிந்தியை கட்டாயம் கற்க வேண்டும் என கூறவில்லை. புதிய கல்விக் கொள்கை தாய் மொழிக்கு முக்கியத்துவம் தருகிறது. தமிழ் மொழி பழமையானது. தமி ழகத்தை சேர்ந்த மாணவர்கள் பன்மொழி அம்சத்தை கற்பதால் என்ன தவறு? தமிழகத்தில் உள்ள சிலர் இதில் அரசியல் செய்கின்றனர். ஹிந்தியை திணிக்கவில்லை, ஆனால் புதிய கல்விக் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம். புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதில் சிலர் அரசியல் செய்கின்றனர். புதிய கல்விக் கொள்கை பிரதமரின் கனவு திட்டம். இதனை செயல்படுத்துவதில் அரசு உறுதியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# ட்ரோன்கள் பதிவில் இரண்டாம் இடத்தில் தமிழகம்

கடந்த ஜனவரி 29 வரையிலான அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் 29,500க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் அதிகபட்சமாக புதுடில்லி யில் 4,882 ட்ரோன்கள் பதிவாகிஉள்ளன. இதைத் தொடர்ந்து, அதிக எண்ணிக்கையிலான ட்ரோன்கள் பதிவு தமிழ்நாடு மற்றும் மஹாராஷ்டிராவில் முறையே 4,588 மற்றும் 4,132 ஆக உள்ளது.

இதுவரை, ஒழுங்குமுறை ஆணையம் வெவ்வேறு ஆளில்லா விமான அமைப்பு மாதிரிகள் அல்லது ட்ரோன்களுக்கு 96 வகை சான்றிதழ்களை வழங்கியுள்ளது. அவற்றில் 65 வகை விவசாய நோக்கத்திற்கானது.

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு ட்ரோனுக்கும் ஒழுங்குமுறை ஆணையத்தால் இயக்கப்படும் டிஜிட்டல் ஸ்கை பிளாட்பார்மில் இருந்து ஒரு தனித்துவமான அடையாள எண் வழங்கப்படும்.

ட்ரோன்களை இயக்கு வதற்கு மூன்று மண்டலங்களை விமான போக்கு வரத்து ஒழுங்குமுறை ஆணையம் வரையறுத்துள்ளது. பச்சை மண்டலத்தில் ட்ரோன்களை இயக்க முன் அனுமதி தேவையில்லை.

அதேநேரத்தில் சம்பந்தப்பட்ட விமான போக்குவரத்து கட்டுபாட்டுக்குள்ளான மஞ்சள் மண்டலத்தில் ட்ரோன்களை இயக்க அங்கீகாரம் தேவை. மேலும், சிவப்பு மண்டலத்தில் ட்ரோன்களை இயக்க மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

(ஐ)



# உன்னை அறிந்தால்...

## சுய பரிவு உங்களிடம் இருக்கிறதா?

சுய பரிவு. இது சற்றுப் பரிச்சயம் இல்லாத, அதிகமாக வழக்கில் இல்லாத வார்த்தை. ஏன் பலரின் வாழ்க்கையில்கூட இல்லாத விஷயம். அன்னை தெரசா அளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு மற்ற உயிர்களின் மீதும் மனிதர்களின் மீதும் நமக்குப் பரிவு இயற்கையாகவே உண்டு.

பறவைகளுக்கு மொட்டைமாடியில் தண்ணீர் வைப்பது, தெருவோர நாய்க்கு பிஸ்கெட் கொடுப்பது, தடுமாறும் முதியோருக்கு உதவி செய்வது, வெயிலில் அலைந்து வீட்டிற்கு வரும் தெரிந்த, சில நேரம் தெரியாத டெலிவரி ஆட்களுக்குகூட நீரோ மோரோ கொடுப்பது, வீட்டு வேலையில் உதவிக்கு வரும் பெண்ணின் துயரம் உணர்ந்து அவள் கேட்கும் போது வசைபாடமல் விடுமுறையோ, முடிந்த முன் பணமோ கொடுப்பது என நாம் அனைவரும் பரிவு காட்டுகிறோம். என்ன செய்கிறோம் என்பது ஆளாளுக்கு வேறுபட்டாலும், ஏதோ ஒன்றை நாம் அனைவரும் செய்வோம்.



இதற்கு முக்கியக் காரணம், நம்மால் அடுத்தவர்கள் இடத்தில் இருந்து பார்த்து அவர்களின் துயரத்தைப் புரிந்துகொள்ள முடிவதுதான். அவர்கள் துன்பம் புரியும்போதுதான் அதற்கான ஆறுதலாக நாம் ஏதாவது செய்ய முயல்கிறோம். அது எத்தனை சிறிய செயலாக இருந்தாலும் அது அந்த உயிருக்கு இதமான அனுபவம். வாழ்க்கை மேல் நம்பிக்கை தரும் இதம்.

இப்படி மற்றவர் மேல் இயல்பாய் வரும் பரிவு நம் மீது நமக்குண்டா?

உடல் சோர்ந்து ஓய்வுக்கு ஏங்கும்போது, தொடர் தோல்வியில் மனம் துவளும்போது, ஒரு தவறிழைத்து அதற்காக வருந்தும் போது, ஏதோ ஒன்றைக் கற்கவோ சாதிக்கவோ முயன்று வெற்றி பெற இயலாத போது நம்மை நாம் பரிவுடன் அணுகுகிறோமா என்றால், இல்லை.

நாம் மிகவும் நேசிப்பவர், 'தனது உடல் பருமனால் நம்பிக்கை தளர்ந்திருந்தால் நாம் அவரிடம் உன்னால் முடியாதது இல்லை இன்னும் கொஞ்சம் முயற்சி தேவை. மேலும் நீ இப்போதே அழகுதான், ஆரோக்கியத்திற்காகக் கொஞ்சம் இளைப்பது நல்லது, சிறிது இடைவெளி கொடுத்து புதிய மலர்ந்த மன நிலையோடு பயிற்சி தொடங்கு எனப் பரிவோடு அவருக்கு நம்பிக்கை ஊட்டுவோம்.'

அதே நாம் அந்த நிலையில் இருந்தால், எனக்கு எதுவுமே சரியாக வராது, நான் எதற்கும் லாயக்கில்லை என்று நம்மை நாமே நோகடித்துக் கொள்வோம். ஏன்? அதே அறிவுரையை நமக்கு நாமே சொல்லிக்கொண்டு மீண்டும் முயற்சியைத் தொடங்கும் போது சுய பரிவு சாத்தியமாகிறது.

சுய பரிவென்பது இப்போதுள்ள வலியோ குறையோ உள்ள நிலையை ஏற்றுக்கொண்டு அதற்காக நம்மை வருத்திக்கொள்ளாமல், நம்மைப் பற்றிய எதிர்மறையான முன் முடிவுக்கு வராமல் தவறுவதோ தோல்வியடைவதோ தவறில்லை. ஆனால், இதனாலெல்லாம் என் மீது எனக்குள்ள நேசமும் நம்பிக்கையும் குறையாது என்கிற முடிவும் நம்மீதான அக்கறையும்தான்.

சுய நேசிப்பும் சுய பரிவும் உள்ள ஒருவர் எந்நிலையிலும் இலக்கை அடைவது சாத்தியம். ஏனெனில் அவர்கள் சோர்ந்து போவதில்லை. தன்னைத்தானே தட்டிக்கொடுத்துக்கொண்டு தேவைப்படும் போது ஓய்வெடுத்து, இலக்கை எய்துகிறார்கள்.

உயர்ந்த சுய மதிப்பீடு சுய பரிவுக்குத் தடையாயிருத்தல் கூடாது. ஆம், நான் திறமையானவள், என் இலக்கை அடையத் தேவையான எல்லாத் தகுதியும் எனக்குண்டு. அதே நேரம் எனக்கும் இடைவெளி தேவை, ஓய்வு தேவை, தவறிழைத்தல் மனிதப் பண்பு, நான் தவறிலிருந்து கற்று இன்னும் மெருகேறுவேன் என்கிற எண்ணமே சுய பரிவு, உயர்ந்த சுய மதிப்பீடு.

### சுய பரிவை எப்படிச் செயற்படுத்துவது?

நம் உற்ற தோழமையோ காதலுக்குரிய இணையரோ பிள்ளைகளோ இதே நிலையில் இருந்தால் அவர்களுக்குச் சொல்வதைச் செய்வதை உங்களுக்கும் சொல்லுங்கள், செய்யுங்கள். அதே நேரம் சுய இரக்கத்திலேயோ, சுய இடைக்கால இன்பத்திலேயோ தொலைந்து போகாதீர்கள். எனக்கு இருக்கும் இந்தப் பிரச்சனை எவருக்கும் நேரக்கூடியது, வெளிவருவது என் கையில் என வாழ்க்கையைக் கையிலெடுத்தால் அது சுய பரிவு.

மாறாக இந்த நிலை எனக்கு மட்டுமே என்றென்னும் போது, உலகத்தோடு தொடர்பு அற்றுப் போகிறது. நம் நிலையை மட்டும் எண்ணி எண்ணி இரக்கப்பட்டு செயலற்றுப் போவது சுய இரக்கம்.

வேலைப் பளு உடலை வாட்டுகிறது எனில் உடலுக்குத் தேவையான ஓய்வெடுத்தல், வேறொரு பிடித்த செயலைச் செய்தால் அது சுய பரிவு. மாறாக ஓய்வெடுக்கும் நேரத்தை முழுக்கத் தொலைக்காட்சியின் முன் அமருவதோ உடலுக்கு ஒவ்வாத உணவு, குடிப் பழக்கத்தை மேற்கொள்வதோ சுய இடைக்கால இன்பம். இடைக்கால இன்பம் அளவோடு இருக்கும் போது அதனால் பெரிய பாதிப்பில்லை. நேர விரயம், சில பல உடல் நலக்கேடு மட்டுமே உண்டாகும், அதே பழக்கமானால் நாம் அதன் பிடியில். சுய பரிவை எங்கிருந்து தொடங்க? எப்போதெல்லாம் மனமும் உடலும் சோர்ந்து செயற்பட முடியாமல் முடங்குகிறதோ,

முதல் வேலையாக அனைத்தையும் ஒதுக்கி ஓய்வெடுங்கள். ஓய்வு நேரம் விரயமல்லஅ இன்னும் வேகமாக செயற்பட உடலுக்கும் மனதுக்கும் ஊக்க மருந்து. ஆரோக்கியமான உணவு, ஆரோக்கியமான பொழுது போக்கில் கவனம் செலுத்துங்கள். இசை, நடைப் பயிற்சி, தோழமைகளுடன் சிறிய பயணம், உங்கள் மனதிற்குகந்த பொழுதுபோக்கு எதுவாயினும் அதைச் செய்யுங்கள்.

உங்களுக்கு நீங்களே ஒரு கடிதம் எழுதுங்கள். எந்த விஷயம் உங்களை வாட்டுகிறதோ அது உங்கள் கூறுவீர்களோ அதை உங்களுக்கு எழுதுங்கள். எழுதுவதும் அதைத் திரும்பத் திரும்ப படிப்பதும் மிகுந்த தெளிவைத் தரும். ஒரு சிறிய ஓய்வின் பின் செய்ய வேண்டியதைத் திட்டமிடுங்கள். தியானமும் உடற்பயிற்சியும் சுய பரிவின் இன்றியமையாத அம்சங்கள்.

வாருங்கள் தோழமைகளே சுய பரிவோடு வாழ்வை வெல்வோம்.



# எண்ணற்ற அவமானங்களால் எல்லையற்ற மகிழ்ச்சி

அமெரிக்கா அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற முதல்நாளில் இருந்து பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அரசின் செலவினங்களை குறைப்பதற்காக, அதிபர் டி.ஓ.ஜி.இ., எனப்படும் சிறந்த நிர்வாகத்துக்கான துறை என்று ஒன்றை உருவாக்கி உள்ளார். இத்துறையின் தலைவராக எலான் மஸ்க் உள்ளார். இவரது குழுவினர் ஒவ்வொரு அரசு துறை யாக உள்ளே நுழைந்து, தேவையற்ற அரசு செலவினங்களை கண்டறிந்து தடை செய்து வருகின்றனர்.

பதில் சொல்லாமல் இருந்தால் எப்படி எலான் மஸ்க்கிடம் கேட்கிறார் பெண் எழுத்தாளர்!

அதுமட்டுமின்றி, தேவையற்ற அரசுத்துறை ஊழியர்களை தானாக முன்வந்து வேலையில் இருந்து விலகிக் கொள்ளவும் வற்புறுத்தி வரு கின்றனர். உலகம் முழுவதும் தொண்டு நிறு வனங்களுக்கு நிதியுதவி வழங்கிய யுஎஸ்எய்ட் நிறுவனத்தையும் மூடிவிட்டனர். இத்தகைய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட எதிர்க்கட்சியினர், பொதுமக்கள் பலரும், எலான் மஸ்க்கை அவருக்கு சொந்தமான எக்ஸ் சமூக வலைத்தளத்தில் திட்டி தீர்க்கின்றனர்.

இது மட்டுமின்றி, சமீபத்தில் எழுத்தாளர் ஆஷ்லே க்லேர், தன் குழந்தைக்கு எலான் மஸ்க் தான் தந்தை என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். அதற்கு மஸ்க் பதில் எதுவும் கூறாத நிலையில், அவரும் கடுமையாக விமர்சனம் செய்து வரு கிறார். இது எல்லாமே, எக்ஸ் சமூக வலை தளத்திலேயே தொடர்ந்து நடந்து வருகிறது.

இது குறித்து, எலான் மஸ்க் தனது கருத்தை தெரிவித்து உள்ளார். அவர் கூறியிருப்பதாவது: எனக்குச் சொந்தமான தளத்தில் (டுவிட்டர்), நான் அனுபவிக்கும் எண்ணற்ற அவமானங்களால் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறேன்' என பதி விட்டுள்ளார். (ஐ)

# உக்ரைனில் எங்கள் படைகளை நிறுத்த தயார் பிரிட்டன் பிரதமர் உறுதி



'உக்ரைனில் அமைதியை நிலைநாட்ட, எங்கள் படைகளை அங்கு நிறுத்தி வைப்பதற்கு தயாராக உள்ளோம்' என்று பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் தெரிவித்தார்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து ரஷ்ய அதிபர் புடினுடன் அமைதிப் பேச்சு நடத்த அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் திட்டமிட்டு உள்ளார். ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பின்றி அமைதிப் பேச்சு மேற்கொள்ள அமெரிக்காவும் ரஷ்யாவும் தயாராகி வருகின்றன. இந்த பேச்சுவார்த்தை சவுதி அரேபியாவில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இனி உதவாது சொல்கிறார் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி

இதற்கு ஐரோப்பிய நாடுகளை அழைக்காதது குறித்து பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோன், பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் உள்ளிட்டோர் கவலை தெரிவித்துள்ளனர். இது குறித்து பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் கூறியதாவது: உக்ரைன் நாட்டின் பாதுகாப்பு என்பது, ஐரோப்பாவின் பாதுகாப்பை போன்றது.

எனவே உக்ரைனில் அமைதியை நிலை நிறுத்த, தேவைப்படும் பட்சத்தில் எங்கள் நாட்டுப் படைகளை அங்கு களம் இறக்கத் தயாராக இருக்கிறோம்.

ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளின் படைகளும் அங்கு களம் இறக்கப் படும் பட்சத்தில், மீண்டும் ஒருமுறை உக்ரைனை தாக்குவதற்கு புடின் தயங்குவார். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# பிணைக்கைதிகளையும் விடுவிக்காவிட்டால் வேதனையை அனுபவிக்க நேரிடும்

'அனைத்து பிணைக்கைதிகளையும் விடுவிக்காவிட்டால், ஹமாஸ் அமைப்பினர் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும்' என ஹமாஸ் அமைப்புக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத் துள்ளார்.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாவை ஆளும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே, 2023 அக்., 7 முதல் மோதல் நடக்கிறது. எகிப்து, கத்தார், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தம் செய்ததை அடுத்து, இஸ்ரேல் - ஹமாஸ் இடையே, 42 நாட்களுக்கு போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி, ஒவ்வொரு கட்டமாக பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. அதற்கு ஈடாக, இஸ்ரேல் சிறைகளில் இருந்த பாலஸ்தீனியர்கள் விடுதலை செய்யப்பட்டனர். போர் நிறுத்தத்தின்படி, பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்து வருகிறது.

பெருவழி பாதை திட்டத்தில் இஸ்ரேல் அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை

இந்நிலையில், பெஞ்சமின் நெதன்யாகு கூறியதாவது: காசா போர் தொடர்பாக இஸ்ரேலும், அமெரிக்காவும் ஒரு பொதுவான உத்தியை கொண்டுள்ளது. அனைத்து பிணைக்கைதிகளையும் விடுவிக்காவிட்டால், ஹமாஸ் அமைப்பினர் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும்.

காசாவில் ஹமாஸின் ராணுவத் திறனையும், அதன் அரசியல் ஆட்சியையும் நாங்கள் ஒழிப்போம். எங்கள் அனைத்து பிணைகைதிகளையும் வீட்டிற்கு அழைத்து வருவோம்.

காசா மீண்டும் ஒருபோதும் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இல்லாமல் இருப்பதை உறுதி செய்வோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# அமெரிக்காவில் புயல் மழை, வெள்ளத்தில் 9 பேர் பலி 39,000 வீடுகளில் மின் துண்டிப்பு



அமெரிக்காவில் புயல் மழை மற்றும் வெள்ளம் காரணமாக 9 பேர் உயிரிழந்தனர். 39 ஆயிரம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா கடுமையான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளது. புயல் காரணமாக பெய்த கனமழையால் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் கென்டக்கியில் மட்டும் 8 பேர் உயிரிழந்தனர்.

இவர்கள் உயிரிழப்புக்கு பலத்த மழை மற்றும் நீரில் மூழ்கிய சாலைகள் காரணம் ஆகும். 39 ஆயிரம் வீடுகளில் மின் துண்டிப்பு ஏற்பட்டது. மேலும் நிலைமை மோசமடையக்கூடும் என்று கென்டக்கி கவர்னர் பெஷியர் கூறியுள்ளார்.

மாலியில் தங்கச் சுரங்க விபத்தில் சிக்கி பெண்கள் 48 பேர் பரிதாப பலி

இந்த துயரச் சம்பவம் குறித்து, கென்டக்கி கவர்னர் பெஷியர் கூறியதாவது: வெள்ளத்தில் சிக்கித் தவித்த நூற்றுக்கணக்கான மக்களை மீட்க வேண்டியுள்ளது. தாய் மற்றும் 7 வயது குழந்தை உட்பட பெரும்பாலான இறப்புகள் கார்கள் அதிக நீரில் சிக்கியதால் ஏற்பட்டது.

மக்கள்சாலைகளில்செல்வதைத் தவிர்க்க வேண்டும். புயல் தொடங்கியதிலிருந்து, மாநிலம் முழுவதும் 1,000 பேர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சில பகுதிகளில் கடுமையான காற்று வீசுவதால் மின் தடைகள் அதிகரிக்கக்கூடும், என்றார்.

பெரும்பாலான பகுதிகளில் 15 செ.மீ., வரை மழை பெய்துள்ளது. நிறைய நீரோடைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்கிறது என வானிலை ஆய்வாளர் பாப் ஓரவெக் தெரிவித்தார். (ஐ)

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பள அதிகரிப்புக்கான மொத்தத் தொகை ரூ.325 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது 2025 முதல் 2027 வரை படிப்படியாகச் செயற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்றைய வரவு - செலவுத் திட்ட உரையில் தெரிவித்தார்.

## சிரேஷ்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதில் ஆஸ்திரேலியாவில் இன்று காலமானார்.

1946 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த அவர், இலங்கையின் கலை, கலாசாரம் மற்றும் ஒலிபரப்புத் துறைக்குப் பாரிய பங்காற்றியுள்ளார்.

அத்துடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையின் தமிழ்ப் பிரிவின் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள மாணவர்களுக்குப் பல ஆண்டுகளாகக் கர்நாடக சங்கீதம், நாட்டியம் உள்ளிட்ட கலைகளை அவர் கற்பித்து வந்தார்.

அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் மாத்திரமே கலாசூரி, விஸ்வ பிரசாதினி, தேஷ நேத்ரு மற்றும் கலை செம்மல் போன்ற கௌரவப் பட்டங்களைப் பெற்ற இலங்கையின் ஒரேயோரு தமிழ் கலைஞராகக் கருதப்படுகின்றார்.

## இரண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு அமைய 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் பெப்ரவரி நாளை 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை 22ஆம் திகதி சனிக்கிழமை உள்ளடங்கலாக ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய தனியார் துறையினரின் 21 ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27 ஆயிரம் ரூபாவாகவும், 2026 ஜனவரி மாதம் 30 ஆயிரமாகவும் அதிகரிக்கத் தனியார் தரப்பின் சேவை வழங்கல் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

# பொலிஸ் திணைக்களத்தில் உருவாக்கப்படவுள்ள புதிய படைப்பிரிவு

*கொழும்பு , பெப். 17*

*பொலிஸ் திணைக்களத்தின் கீழ் அதிரடிப் பாய்ச்சல் படைப்பிரிவொன்றை உருவாக்க பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தீர்மானித்துள்ளார்.*

*குறித்த அதிரடிப் பாய்ச்சல் படைப் பிரிவானது, நேரடியாக பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் செயற்படும்.*

*அத்துடன் இலங்கையில் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் எந்தவொரு பொலிஸ் நிலையத்துக்கும் முன்னறிவித்தல் இன்றி வருகை தந்து , பொலிஸ் நிலைய செயற்பாடுகளை பரிசீலனைக்கு உட்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.*

*இதற்கான கட்டளை அதிகாரியாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.*

*அவரின் கீழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களின் தலைமையில் இந்தப் படைப்பிரிவு பல்வேறு அணிகளாக உருவாக்கப்படவுள்ளது.* *(ஐ)*

# மியன்மாரில் சைபர் முகாம்களில் சிக்கியுள்ள இலங்கையர்கள்



கொழும்பு , பெப். 17

மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் மேலும் நான்கு இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில் ,தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை மீட்பதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருவதாக மியன்மாரில் உள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், அவர்களில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மியன்மாரில் சைபர் குற்றவாளிகளின் பிடியிலிருந்து 30 இலங்கையர்கள் மீட்கப்பட்டு நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மியன்மாரில் உள்ள சைபர் குற்ற முகாம்களில் பலவந்தமாக தடுத்து வைக்கபட்டிருந்த 17 இலங்கையர்களில் மொத்தம் 13 பேர் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட நபர்களில் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட 11 இளைஞர்கள் மற்றும் 02 இளம் பெண்கள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தககது. (ஐ)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் இல்லை

*கொழும்பு , பெப். 17*

*இந்த ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங் கப்படாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.*

*ஏனெனில் இந்த நோக்கத்திற்காக பணம் ஒதுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*தற்போது நாடாளுமன்றில் முன்வைத்து வரும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகன அனுமதி வழங்கப்படாது என்று அவர் மேலும் கூறினார்.*

*அரசுக்குச் சொந்தமான அனைத்து சொகுசு வாகனங்களும் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஏலம் விடப்படும் என்று ஜனாதிபதி தெரிவித துள்ளார்.* *(ஐ)*

# மெட்ரோ பேருந்து நிறுவனத்தின் கீழ் புதிய சொகுசு பேருந்து சேவை



கொழும்பு , பெப். 17

இலங்கையில் ஒரு புதிய கூட்டுத்தாபனமாக நிறுவப்படும் ‘மெட்ரோ பேருந்து நிறுவனத்தின்’ கீழ் 200 சொகுசு பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கான முதல் படி இதுவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை இன்று (17) நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு நகர நுழைவாயிலுக்குள் அடையாளம் காணப்பட்ட மூன்று பிரதான சாலை வழித்தடங்களில் 100 சொகுசு பேருந்துகள் பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அடையாளம் காணப்பட்ட மூன்று பாதைகள் கொட்டாவ - புறக்கோட்டை, கடவத்த - புறக்கோட்டை மற்றும் மொரட்டுவ - புறக்கோட்டை என்பனவாகும்.

இதற்கிடையில், முன்மொழியப்பட்ட பேருந்துகள் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அமைப்பின் கீழ் இயங்கும்.

மேலும், இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு தனித்தனி பேருந்து அட்டவணைகளுக்குப் பதிலாக, அனைத்து வழித்தடங்களிலும், குறிப்பாக நீண்ட தூர பேருந்து சேவைகளில், ஒருங்கிணைந்த பேருந்து அட்டவணையை செயல்படுத்தும் திட்டத்தையும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். (ஐ)

# சுற்றுலாத் துறைக்கு 500 மில்லியன் நிதி ஒதுக்கீடு



கொழும்பு , பெப். 17

நாடாராளுமன்றத்தில் தனது முதல் வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, 2025 ஆம் ஆண்டில் நாடு 2.5 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் என்று எதிர்பார்ப்பதாக அறிவித்துள்ளார்.

இந்த இலக்கை அடைய, சுற்றுலா உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டததில் ரூ. 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுற்றுலாத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்த டிஜிட்டல் டிக்கெட் முறைக்கான திட்டங்களையும் ஜனாதிபதி அறிமுகப்படுத்தியுள்ளார். (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.02.2025 இல் வெளியிடப்பெற்றது.